[2005 செப்டம்பர் 23

26—

பசு பாதுகாப்பு மையம்

* **37491—திரு. பி.கே.டி. நடராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், அருள்மிகு கோபிநாத சுவாமி கோயிலில் பசு பாதுகாப்பு மையம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயில் மலைக்கோயிலாக இருப்பதாலும், அனைத்து பொருட்களையும் மலைக்குத் தலைச்சுமையாக கொண்டுசெல்ல வேண்டியிருப்பதாலும் போதிய நிதி வசதிகள் இல்லாத நிலை உள்ளதாலும், இத்திருக்கோயிலில் பசு பாதுகாப்பு மையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

திரு. பி.கே.டி. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி என் வினாவைக் கேட்கிறேன். எனது ஆத்தூர் சட்டமன்ற தொகுதி, ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் மிகப் பழமை வாய்ந்ததும், மிகவும் பிரசித்தி பெற்றதுமான அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகை தந்து நேர்த்திக் கடனாக பசு மாடுகள், காளை மாடுகளை மாதம் ஒன்றுக்கு 100 மாடுகள் வரை வழங்கி வருகின்றார்கள்.*

அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலுக்கு அருகில் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கும், மதுரை

2005 செப்டம்பர் 23]

மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்கும், மதுரை அழகர் கோயிலுக்கும் மாதம் ஒன்றுக்கு 150 மாடுகள் வரை நேர்த்திக் கடனாக பக்தர்கள் செலுத்தி வருகின்றார்கள்.

இந்த பிரசித்தி பெற்ற நான்கு கோயில்களுக்கும் நேர்த்திக் கடனாக விடுகின்ற அனைத்து மாடுகளும் வெகுதூரத்தில் உள்ள திருநெல்வேலி கோசாலைக்கு மாதம் 500 மாடுகள் வரை அனுப்பி வைக்கப்படுகின்றன. அதிக தூரத்தில் உள்ள திருநெல்வேலிக்கு அனுப்புகின்ற நேரத்தில் இடைத்தரகர்கள்மூலம் சில தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் கோயில், மதுரை அழகர் கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயில் ஆகிய நான்கு கோயில்களுக்கும் மையமாகத் திகழ்கின்ற அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமாக நிலங்கள் அதிகம் உள்ளது; பழனி கோயிலுக்கும் அதிகமான நிலங்கள் உள்ளது. ஆகவே, பசுவதை தடையைப் பொறுத்தமட்டிலும், பசுமாடுகளைக் காப்பதிலும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக உள்ள காரணத்தால், இந்த நான்கு கோயில்களுக்கும் மையமாக உள்ள அருள்மிகு கோபிநாத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் கோசாலை, அதாவது பசுக்கள் பாதுகாப்பு மையம் அமைப்பதற்கு நடப்பு நிதியாண்டில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு கோபிநாத சுவாமி திருக்கோயிலில் கோசாலை அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. பி.கே.டி. நடராஜன்: மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மரியாதைக்குரிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, திரு. ஆர். சாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (சிரிப்பு) ரொம்ப நெகிழ்ந்துவிட்டார் அவ்வளவுதான்.